
May 18, 2020

# Growing of Chicken (Layers)

# முட்டைக் கோழி வளர்ப்பு

## கூடு அமைக்கும் முறைமை:



சிறந்த காற்றோட்டம் உள்ள கூடுகளை அமைப்பதே கோழி வளர்ப்பிற்கு மிக உகர்ந்தது. கூட்டின் நீள அகலங்களை உங்கள் விருப்பின் பிரகாரம் நீங்க்ள் தீர்மானிக்கலாம். ஆனாலும் உயரம் பக்க வாட்டில் 6 அடியாகவும் நடுவில் 8 அடியாகவும் இருத்தல் அவசியமாகும். முட்டை கோழி வளர்ப்பதாயின் ஒரு கோழிக்கு இரண்டரைச் சதுரடி இட வசதி இருக்க வேண்டும். வளர்க்கவிருக்கும் கோழிகளின் எண்ணிக்கைக்கு அமைவாக கூட்டின் நீள அகலத்தை தீர்மானித்துக் கொள்ளலாம்.

படத்திலுள்ளவாறு பக்கவாட்டிற்க்கு தரைலிருந்து 2 அடிக்கு மறைப்பு அமைத்து மேல்ப்பகுதியை கம்பி வலையினால் அமைக்க வேண்டும். 10 கோழிகளுள்ள கூட்டிற்க்கு குறைந்தது இரண்டு முட்டைப் பொட்டிகளையும் அமைக்க வேண்டும். முட்டைப் பொட்டியில் உமி அல்லது மரத்தூள் அல்லது வைக்கோல் வைக்க வேண்டும். கூட்டில் தரைக்கு 6 அங்குல உயரத்திக்கு உமி அல்லது மரத் தூள் பரவ வேண்டும். கிழமைக்கு ஒரு முறை கட்டயமாக தரையிலுள்ள எச்சங்களை அகற்றி புதிதாக உமி அல்லது மரத்தூள் பரவவும். எப்போதும் தரை ஈரப்பதமற்றதாக இருக்கும்படி பார்த்துக் கொள்ளவும். கிழமைக்கு ஒரு முறையாவது கூட்டையும் உணவு மற்றும் தண்ணீர்ப் பாத்திரங்களை தொற்று நீக்கியினால் கழவுமிடத்து ஆரோக்கியமான கோழிகளை எதுவித அபாயத் தொற்றுக்கள் இன்றி பாரமரிக்க முடியும்.

30 முட்டையிடும் கோழிகளுக்கு 6 அடி நீளமான அல்லது 100 கோழிகளுக்கு ஐந்து 18 அங்குல விட்டமுள்ள வட்ட உணவு பாத்திரமும் 100 கோழிகளுக்கு இரண்டு 9 லீட்டர் தண்ணீப் பாத்திரம் அவசியமானது.



No: 17, Raja Veethi, Atchuvely(NP), Sri Lanka | Tel: 94(0) 777 204 883
www.royjoygroup.com | farm@royjoygroup.com

முட்டை இடும் கோழிகள் 18 முதல் 19 வார காலத்தில் முட்டை இட ஆரம்பிக்கும் அவை 172 முதல் 178 வாரம் வரை முட்டை இடும். தினமும் 5 முறை பெட்டியில் இருந்து முட்டைகள் அகற்றப் படவேண்டும். கோழிகளுக்கு கூட்டில் 16 மணி நேரம் வெளிச்சம் அவசியம். ஆகையால் பகல் நேரம் தவிர வெளிச்சம் குறைவான தருனத்தில் மின்சார ஒளி மிகத் தேவையானதாகும்.

அதி உயர் திறமான 14 முட்டைக் கோழிகள் உள்ளன. இலங்கையில் White Leghorns மற்றும் RIR போன்றவையே பிரசித்தி பெற்றவையாகும்.



White Leghorn



R I R

ஆரோக்கியாமான முட்டைக் கோழி வளர்ப்பில் மருந்து மற்றும் தடுப்பூச்சி மிக அவசியம். இதோ தடுப்பூச்சி அட்டவனை.

| | | |
|---|---|---|
| ஒரு நாள் குஞ்சு | Mareks | (மறிக்ஸ்) |
| 2வது வாரம் | Gumboro | (கம்போரோ) |
| 3ஆம் வாரம் | New Castle | (புதிய காஸ்டல்) |
| 6ஆம் வாரம் | Fowl Pox | (கோழி போக்ஸ்) |
| 8ஆம் வாரம் | Fowl Tyhoid | (கோழி டைவறாய்டு) |
| 10ஆம் வாரம் | Raniket | (ரணிக்கட்) |
| 19ஆம் வாரம் | Deworming | (நீரிழிவு) |

White Leghorn வருஷத்திற்கு பெரிய நடுத்தர 250 முதல் 280 முட்டைகளையும் RIR வருஷத்திற்கு பெரிய 300 முட்டைகளையும் இடும்.

தரமான நிறையுள்ள முட்டைக்கும் ஆரோக்கியமான கோழி வளப்பிற்கும் முட்டையிடும் கோழிகளுக்கு பின்வரும் முறையில் உணவு அளிக்க வேண்டும்.

| வாரம் | நிறை கிராம் | வாரம் | நிறை கிராம் | வாரம் | நிறை கிராம் |
|---|---|---|---|---|---|
| 1 | 9 – 11 | 7 | 45 – 47 | 13 | 66 – 68 |
| 2 | 17 – 19 | 8 | 49 – 51 | 14 | 69 – 71 |
| 3 | 24 – 26 | 9 | 53 – 55 | 15 | 72 – 74 |
| 4 | 30 – 32 | 10 | 57 ~ 59 | 16 | 75 – 77 |
| 5 | 36 – 38 | 11 | 60 – 62 | 17 | 78 – 80 |
| 6 | 41 – 43 | 12 | 63 – 65 | 18 | 84 – 86 |

100 முட்டைக் கோழி வளர்ப்பிற்கு 15 அடி அகலமும் 18 அடி நீளமும் கொண்ட ஒரு கூடு போதுமானது. அதற்கான செலவு கூடு அமைக்கும் இடத்தைப் பொறுத்தே அமையும்.

| | | | |
|---|---|---|---|
| கூட்டின் மொத்த செலவினம் | (15 அடி X 18 அடி) | ~ | 00000.00 |
| குஞ்சுகளின் கொள்வனவு | (100 குஞ்சுகள்) | ~ | 20000.00 |
| உணவுத் தொட்டிகள் | | ~ | 4750.00 |
| தண்ணீர் பாத்திரங்கள் | | ~ | 1650.00 |
| உணவு | (25 வாரங்களுக்கு) | ~ | 88000.00 |
| மருந்து மற்றும் விட்டமின்கள் | | ~ | 9430.00 |
| போக்குவரத்து செலவினங்கள் | (குஞ்சு மற்றும் உணவு தரிவிப்புக்கள்) | ~ | 2000.00 |
| தற்செயல்ச் செலவுகள் | | ~ | 5000.00 |
| **மொத்த செலவு (கூடு இல்லாது)** | | ~ | **130830.00** |

வருமானம்

கோழி ஒரு வருஷத்திற்கு குறைந்தது 250 முட்டைகள் இடும். ஆகவே வருடம் 25000 முட்டைகளைப் பெறுவீர்கள். முட்டை ஒன்றின் விலை ரூபா 12.00 இருக்குமிடத்து ரூபா 300000.00 வருமானம் கிடைக்கும். 280 முட்டைகள் இடும் போது ரூபா 336000.00 பெற்றுக் கொள்ள முடியும்.



No: 17, Raja Veethi, Atchuvely(NP), Sri Lanka | Tel: 94(0) 777 204 883
www.royjoygroup.com | farm@royjoygroup.com